விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 056 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 01 வெள்ளிக்கிழமை (13.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வாகனத்தை நிறுத்திய பின்னரே துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது

### இது திட்டமிட்ட படுகொலை; சுட்டுக் கொல்லப்பட்ட சிறுவனின் தாயார்

(யாழ்ப்பாணம்)

வாகனத்தை நிறுத்திய பின்னரே பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் இது திட்டமிட்ட ஒரு படுகொலை எனவும் அல்லைப்பிட்டிப் பகுதியில் வைத்து பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிறுவன் அ.அருள்பயாஸின் தாயார் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இறுதிச் சடங்கின் பின் 15ஆம் பக்கம் பார்க்க

## அல்லைப்பிட்டியில் சுடப்பட்ட 17 வயதுச் சிறுவனின் சடலத்துடன் உறவினர்கள் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## படையினரின் சம்மதத்துடன்

# வடக்கில் மக்களின் காணி விடுவிப்பு



### அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

*(கொழும்பு)*

படையினரின் சம்மதத்துடன் வடக்கில் உள்ள பொது மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## கெடுபிடிகளுக்கு மத்தியில் சுட்டுக் கொல்லப்பட்ட சிறுவனின் சடலம் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களின் கெடுபிடிகளுக்கு மத்தியில் அல்லைப்பிட்டியில் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட அருள்பயாஸின் 02ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

அநுர அரசாங்கத்தை அசைக்கவே முடியாது. எதிரணியினரின் ஆட்சி 15ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் பெயரில் பாரிய மோசடிகள்

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சலுகை என்ற பெயரில் மோசடி குறித்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் பெயர், சின்னம் மற்றும் நம்பகமான புகைப்படங்கள் அடங்கிய ஒரு போலிச் செய்தி வாட்ஸ்அப் மற்றும் பேஸ்புக்கில் (முகநூல்) பரவி வருவதாக 15ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி அநுர, ரணில், மைத்திரிக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்புமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் பெண்கள் மற்றும் ஆண்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப அறுவைச் சிகிச்சை மூலம் தங்கள் பாலியல் அடையாளத்தை மாற்றிக்கொள்ள உதவும் முந்தைய மற்றும் தற்போதைய அரசாங்கங்களால் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் சட்டவிரோதமானது எனத் தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் பின்னர் உயர்நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட் 02ஆம் பக்கம் பார்க்க

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் வழக்கை விசாரணை செய்ய

### விசேட நீதிமன்றம் நிறுவப்பட்டது

(கொழும்பு)

கடந்த 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான வழக்கை விசாரணை செய்வதற்காக விசேட மேல் நீதிமன்றம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி அதன் விசாரணை நடவடிக்கைகள் கொழும்பு 07, பௌத்தாலோக்க 15ஆம் பக்கம் பார்க்க

## போக்குவரத்து கட்டமைப்பில் விரைவில் மாற்றம்

### ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

போக்குவரத்துக் கட்டமைப்பில் விரைவில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என 02ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு நீண்ட கால ஒத்துழைப்பு வழங்கப்படும்

### ஆசிய அபிவிருத்தி வங்கி



02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நேர்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்பத் துரித நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

(அம்பாந்தோட்டை)

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை இவ்வருடத்தின் நடுப்பகுதிக்குள் நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நேற்று (12) பாடசாலைகளுக்கு விஜயம் செய்ததன் பின்னர் பிரதமர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடசாலை வரவானது தற்போது குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

எனினும் புதிய கல்விச் சீர்திருத்தங்களின் ஊடாக இந்நிலைமையில் மாற்றம் ஏற்படும்.

புதிய கல்வி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதில் மிக முக்கியமான தரப்பினர் ஆசிரியர்களே ஆவர்.

பிள்ளைகளுக்குத் தரமான கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாடாக எதிர்பார்க்கும் முழுமையான மாற்றத்தை அடைந்து கொள்வதற்குத் தகுதியான மனித வளம் அவசியமானது என்றும் அதற்காகப் பிள்ளைகளுக்கு முறையான மற்றும் தரமான கல்வியை வழங்குவதே அரசாங்கத்தின் முதன்மையான கடமையாகும் என்றார். (ம-7)


## INVITATION FOR BIDS (IFB)
**IFB No : 2026 / 01**
**VELANAI PRADESHIYA SABHA, VANGALAVADY JUNCTION, VELANAI**

01. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Velanai Pradeshiya Sabha Invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
02. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below. **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
04. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents
05. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-02-13 To 2026-02-26** during **09:00 hrs and 15:00 hrs.**
06. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
07. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai **on or before 27.02.2026, 10.30 a.m** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
08. Pre-Bid Conference will be held at **Conference Hall** Volanai Pradeshiya Sabha, Vangalavady junction. Velanai. commencing at **11.00 A.M as stated in table below.**
09. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2026-02-13 To 2026-02-26 |
| | Pre-Bid Conference | At 11.00 A.M on 2026-02-20 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 2026-02-27 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(18)/02/ PSDG/01/2026 | Construction Of Sitpanai South Veethy Stags -1 at Velanai | 4.661 | 60 | C8 or above in Highway Construction | 2000.00 | 47,000.00 | 15.05.2026 | 17.04.2026 |
| NP/14/41(18)/02/ PSDG/02/2026 | Construction of Sankatharkeny 1st Cross Lane at Pungudutivu | 4.237 | 60 | C8 or above in Highway Construction | 2000.00 | 42,500.00 | 15.05.2026 | 17.04.2026 |

**Chairman,**
**Divisional Procurement Committee (DPC)**
**Velanai Pradesiya Sabha,**
**Vangalavady Junction,**
**Velanai**

(C-4990) 13.02.2026


## ஜனாதிபதி...

டுள்ளது.

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு தொடர்பாக, முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க மற்றும் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சட்டமா அதிபருக்கு நோட்டீஸ் அனுப்ப உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவை விமானப்படையின் ஓய்வுபெற்ற ஊனமுற்ற போர் வீரரான சாந்த ஜெயதிலகவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை தலைமை நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவர் அடங்கிய தீர்பாயத்தின் முன்பாக நேற்று முன்தினம் பரிசீலிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, குறித்த மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 20ஆம் திகதி மீண்டும் பரிசீலிக்கப்படும் என்றும் ஒரு வாரத்திற்குள் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## இலங்கைக்கு...

இலங்கைக்கு நீண்டகால ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான புதிய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஷானன் கவுலின், நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது பல ஆண்டுகளாகக் கட்டியெழுப்பப்பட்ட வலுவான பங்காளித்துவத்தின் அடிப்படையில் இலங்கையுடனான உறவுகளை மேலும் விரிவுபடுத்த எதிர்பார்ப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின், உள்நாட்டுக்கான புதிய பணிப்பாளர் ஷானன் கவுலின் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக அரசாங்கம் ஆரம்பித்துள்ள திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. (ம-7)

## போக்குவரத்து...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொதுமக்களுக்குக் கௌரவமான மற்றும் நம்பகமான சேவையை வழங்குவதற்காக முழுப் போக்குவரத்து கட்டமைப்பிலும் விரைவான மாற்றம் ஏற்பட வேண்டும்.

நாட்டின் போக்குவரத்துக் கட்டமைப்பை மிகவும் வினைத்திறன் மிக்க, பாதுகாப்பான மற்றும் நவீன தொழில்நுட்பத்துடனான போக்குவரத்துச் சேவையாக மாற்ற வேண்டும் என்றார்.

மேலும் போக்குவரத்துத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக பொருளாதாரப் போட்டித்தன்மை, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, டிஜிட்டல் மாற்றம், சமூக சமத்துவம் மற்றும் பிரவேசம் மற்றும் பாதுகாப்பு ஆகிய 05 தூண்களின் கீழ் போக்குவரத்து அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ள மூலோபாயத் திட்டம் குறித்து இதன்போது ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டது. (ம-7)

## சுட்டுக்...

சடலம் வழுக்கையாறு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

குறித்த சிறுவன் கடந்த 10ஆம் திகதி ஹயஸ் வாகனத்தைச் செலுத்திச் சென்ற போது அதிகாலை வேளை அல்லைப்பிட்டிப் பகுதியில் வைத்து பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியாகினார்.

இந்நிலையில் அவரது இறுதிச் சடங்கு நேற்று வட்டுக்கோட்டை - சித்தங்கேணியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து சடலம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பொலிஸாருக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்குமிடையே மாவடிச் சந்தி மற்றும் சங்கரத்தைச் சந்தியில் முறுகல் ஏற்பட்டது.

இறுதியாக வழுக்கையாறு இந்து மயானத்தில் அவரது சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கு மற்றும் இறுதி ஊர்வலத்தில் ஏராளமான புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. (ம-7,104)

## வடக்கில்...

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் படையினர் மற்றும் அரசின் கீழ் உள்ள மக்களின் காணிகளை தேவையின் அடிப்படையில் விடுவிக்க முடியும்.

படையினரின் சம்மதத்துடன் இதற்கான நவடிக்கை எடுக்கப்படும் எனறார்.

மேலும், அறுபது மாதங்கள் பணியாற்றுவதற்காக எமது அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அரசாங்கங்கள் வழங்கிய நிதியை விடவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது அரசாங்கம் அதிக நிதியை வழங்கியுள்ளது.

டித்வா சூறாவளியால் பாதிப்புற்ற மக்களுக்கும் அதிகளவான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. எமது அரசாங்கம் பணத்தினை மீதப்படுத்தியதாலேயே இந்நிதியை வழங்க முடிந்தது.

வறிய மக்களின் நிலைமையை அறிந்து கொள்ளும் மனநிலையிலேயே எமது ஜனாதிபதி செயற்படுகிறார். டித்வா புயலில் அழிவடைந்த வீடுகளுக்கு ஐம்பது இலட்சம் ரூபா வழங்கப்படுவதை எங்களால் கூட நம்ப முடியாது இருந்தது.

ஒரேயொரு வீடுள்ளவர்களின் மன நிலைகளை எங்களால் புரிய முடிகிறது. இவ்வாறானவர்களின் கஷ்டங்களை வவுனியாவில் ஒரு வீடு, கொழும்பில் ஒரு வீடு மற்றும் லண்டனில் ஒரு வீடு இருப்பவர்கள் அறியப்போவதில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் பிறப்பு நூற்றாண்டையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் நினைவுப் பேருரை நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உயர்பட்டப் படிப்புகள் பீட மண்டபத்தில் (திருநெல்வேலி இலங்கை வங்கி அருகில்) யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவரும் யாழ். பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியருமாகிய அ. சண்முகதாஸ், பேராசிரியர் ஆ. சதாசிவம் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளனர். (8-33)

# கால்நடைகளை திருடும் கும்பலை கட்டுப்படுத்துங்கள்

## வேலணையில் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**சட்டவிரோதமாக கால்நடைகளைத் திருடி இறைச்சியாக்கும் கும்பலை இல்லாதொழிக்க சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் தரப்பினர் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும் எனக்கோரி வேலணையில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தினரால் குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் வேலணை வங்களாவடியில் நடைபெற்றது.

வங்களாவடி சந்தியில் ஆரம்பமான குறித்த போராட்டம் நடைபவனியாக வேலணை பிரதேச செயலகம் வரை, "வறிய பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்காதே", "வாழ்வாதாரத்தை பறிக்காதே", "ஊர் கூடித் திருட்டை ஒழிப்போம்" உள்ளிட்ட பல்வேறு கோசங்களுடன் சென்று பிரதேச செயலர் தனபாலசிங்கம் அகிலனிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்திருந்தனர்.

இது தொடர்பில் போராட்டக்காரர்கள் கூறுகையில்,

வேலணை பிரதேசத்தில் 420 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட பண்ணையாளர்கள் இருக்கின்றார்கள்.

இவர்கள் சுமார் 3000 வரையான நல்லின கறவை மாடுகளை கொண்டு குறித்த பால் உற்பத்தியை முன்னெடுக்கின்றனர்.

அதேபோன்று 4000 வரையான ஆடுகளும் இங்கு வளர்க்கப்படுகின்றன.

இந் நிலையில் அல்லைப்பிட்டி பகுதியில் இதுவரை 4 ஆயிரத்துக்கும் அதிகமான மாடுகள் திருட்டுக் கும்பல்களால் களவாடப்பட்டு இறைச்சியாக்கப்பட்டு விட்டன.

அத்துடன் ஒட்டுமொத்த வேலணையை எடுத்துக் கொண்டால் அது 30 ஆயிரத்தை கடந்துவிட்டது. இதில் நல்லின கறவை மாடுகளும் அடங்கும்.

அந்தவகையில் கால்நடை திருட்டுக் கும்பலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் சட்ட ஒழுங்கு தரப்பினருக்கு எமது ஒத்துழைப்பு இருக்கும் என்றும் தெரிவித்தனர். (8-33)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் தமிழர்களது இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு கொண்டுவரவுள்ள ஏக்கிய இராச்சிய வரைபை நிராகரித்து, அதற்குப் பதிலாக கூட்டாட்சி (சமஷ்டி) தீர்வை ஒரே குரலில் முன்வைப்பது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என தமிழ்த் தேசியப் பேரவைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவித்துள்ளார். (8)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய வருடாந்த "செயற்பட்டு மகிழ்வோம்" விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு வயாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் த.செந்தூரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக உடற்கல்வி பிரதிப் பணிப்பாளர் கு.செந்தில் குமரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8-33)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

புதுக்குளம், கோவிற்குளம் பகுதியை வதிவிடமாகக் கொண்ட சசிகலா பறுனாந்து என்பவரது தேசிய அடையாள அட்டை (816204488V) கண்டெடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரடியாக வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (8)

### குப்பை கொட்டுவோருக்குத் தண்டம்

## நல்லூர் பிரதேச சபைக்கு 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வருமானம்!

### தவிசாளர் மயூரன்

(யாழ்ப்பாணம்)

பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதனை தடுக்கும் செயற்பாட்டில் கடந்த ஐந்து மாத காலத்தினுள் நான்கு இலட்சத்து இருபது ஆயிரம் ரூபா தண்டப் பணம் நல்லூர் பிரதேச சபைக்கு வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளதாக தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதனை தடுக்கும் முகமாக முதற்கட்டமாக அதிகளவில் கழிவுகள் கொட்டப்படுகின்ற 11 பொது இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.



அங்கு கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு கழிவு கொட்டுபவர்களை அடையாளப்படுத்தி அபராதம் அறவிடப்படும் பணிகள் நல்லூர் பிரதேச சபையினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வருமானம் கிடைத்துள்ளதுடன் நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் கழிவுகளைப் போடுகின்ற செயற்பாடுகளும் வெகுவாகக் குறைந்துள்ளன.

இவ்வாறு கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு அபராதம் விதிக்கின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் பொது இடங்களில் சிலர் கழிவுகள் வீசுகின்ற செயற்பாடுகளை நிறுத்தவில்லை.

காலத்தின் தேவை கருதி இச் செயற்பாட்டினை முற்றாக நிறுத்துவதற்குரிய கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டும் குற்றச் செயல்கள் ஏற்படுவதனை குறைக்கும் முகமாகவும் மேலும் பல காண்காணிப்பு கமராக்களினை பொருத்தும் நடவடிக்கையினை நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளது.

எனவே பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு மாறாக தங்களுடைய பொறுப்புணர்வினை உதாசீனம் செய்து பொது இடங்களில் குப்பைகளைப் போடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களது சட்டவிரோத செயற்பாடு எமது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளத்தில் பதிவேற்றப்படும் என்பதனையும் மன வருத்தத்துடன் அறியத்தருகின்றேன் எனத் தெரிவித்தார். (8-33)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அருள்மிகு ஸ்ரீ சிவஞான வைரவ சுவாமி திருக்கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசந்திரன்)

## மூத்த உழைப்பாளர் மதிப்பளிப்பும் தைப்பூச பொங்கல் விழாவும்

(கிளிநொச்சி)

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" எனும் தொனிப் பொருளில் கிளிநொச்சி அக்கராயன் ஏர்நிலம் தொண்டமைப்பு நடத்தும் "மூத்த உழைப்பாளர் மதிப்பளிப்பும் தைப்பூசப் பொங்கல் விழாவும்" நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி ஸ்கந்தபுரம் அ.த.க பாடசாலையில் இடம்பெறவுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# உலகக் கிண்ண ரி-20 போட்டி

# 105 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றி!

**ஐ.சி.சி ரி-20 உலகக் கிண்ண கிரிக் கெட் தொடரின் 16ஆவது போட்டியில் ஓமான் அணியை எதிர்கொண்ட இலங்கை 105 ஓட் டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**




இது தொடரில் இலங்கை அணி பெற்றுக் கொண்ட இரண்டாவது வெற்றியாகும்.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஓமான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 225 ஓட்டங்களை பெற் றது.

இலங்கை அணி சார்பில் குசல் மெண்டிஸ் 61 ஓட்டங்களையும், பவண் ரத்நாயக்க 60 ஓட்டங்க ளையும், தசுன் சானக்க 50 ஓட்ட ங்களையும் அணிக்காக பெற்று கொடுத்தனர்.

226 ஓட்டங்கள் வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஓமான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 120 ஓட் டங்களை பெற்று தோல்வியடைந்தது.

மொஹமட் நதீம் 56 பந்துகளில் 53 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் மஹீஷ் தீக்ஷன மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் முறையே இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி னர்.

போட்டியின் ஆட்டநாயகனாக பவன் ரத்நாயக்க தெரிவானார். (3)

## தேசியமட்ட உதைபந்தாட்டப் போட்டி
## சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு வெள்ளிப் பதக்கம்




இலங்கை உதைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்படுகின்ற 14 வயது பிரிவினர்களுக்கான தேசிய மட்ட சமபோஷா வெற்றி கிண் ணத்தில் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெள்ளிப் பதக் கத்தைக் கைப்பற்றியுள்ளது.

அகில இலங்கை பாடசாலைக ளுக்கு இடையிலான தேசிய மட்ட சமபோஷா கிண்ணத்திற்கான ஆண்களுக்கான சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு குதிரைத் திடல் மைதா னத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாஹிரா கல்லூரி அணி மோதியது.

இதில் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 0:3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப் பற்றியுள்ளமை குறிப்பிடத்தக் கது. (3-90)

## முன்னாள் சம்பியன்களுக்கிடையிலான போட்டி; இங்கிலாந்தை வீழ்த்தியது மே.தீவுகள் அணி

ஐ.சி.சி ஆடவர் ரி-20 உலகக் கிண்ண வரலாற்றில் தலா இரண்டு தடவைகள் சம்பியனான இங்கிலாந்து- மேற்கிந்திய தீவுகள் அணிகளுக் கிடையிலான போட்டியில் இங்கிலாந்தை 30 ஓட்டங்களால் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி கொண்டது.

மும்மையில் நடைபெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சைத் தேர்வு செய் தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நிர்ண யிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 196 ஓட்டங்கள் குவித்தது. ரூதர்போர்டு அதிரடியாக ஆடி 42 பந்தில் 76 ஓட்டங்கள் குவித்தார்.




ரோஸ்டன் சேஸ் 34 ஓட்டங்களும், ஹோல்டர் 33 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்தின் அடில் ரஷித், ஓவர்டன் தலா 2 விக்கெட் வீழ்த்தி னர். 197 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இங்கிலாந்து கள மிறங்கியது. ஜேக்கப் பெத்தேல் 33 ஓட்டங்க ளும், பிலிப் சால்ட் 31 ஓட்டங்களும் எடுத்த னர். இறுதிவரை போராடிய சாம் கர்ரன் 43 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில், இங்கிலாந்து 19 ஓவரில் 166 ஓட்டங்களுக்கு ஆட்ட மிழந்தது இதன்மூலம் 30 ஓட்ட ங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் வெற்றி பெற்றது.

மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில் குடகேஷ் [illegible] ரோஸ்டன் சேஸ் 2 [illegible] வீழ்த்தினர். (3)




மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலை முதல்வர் அருட்சகோதரர் சந்தியாகு FSC தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

(படம்- ஜோசப் நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வைத்தியசாலைகளில் தாதியர்களுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் 20,000 தாதியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. அத்தோடு தாதியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க பேச்சுவார்த்தைக்கு இணங்காத சுகாதார அமைச்சர் உட்பட தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக பாரிய வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும் அரசாங்க தாதியர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

பொரல்லவிலுள்ள அரசாங்க தாதியர்கள் சங்க அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், விடுமுறையில் வெளிநாட்டில் தாதியர் தொழிலைத் தொடரும் வாய்ப்பு இரத்துச் செய்யப்பட்டதாகவும், இதன் விளைவாக, ஐந்து ஆண்டுகள் சம்பளம் இல்லாத விடுமுறையில் பொருளாதார பிரச்சினை களை தீர்க்கும் வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

விடுமுறை வாய்ப்பு இரத்துச் செய்யப்பட்டதால் தாதியர்கள் இப்போது சேவையை கைவிட்டு வெளிநாடு செல்ல ஆசைப்படுவதாகவும் ரத்னபிரியா கூறினார்.

தற்போது கிடைக்கப்பெறும் தரவுகளின்படி, சுமார் 3,000 அரசு தாதியர், விடுமுறையில் வெளிநாட்டு வேலைக்குச் சென்றுள்ளதாகவும், மேலும் சுமார் 1,500 பேர் சேவையை விட்டு வெளியேறி வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (நி)

# கடவுச்சீட்டுகள் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அமைப்பில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு காரணமாக கடவுச்சீட்டுகள் மற்றும் விசாக்கள் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த அமைப்பு மீட்டெடுக்கப்பட்டவுடன் கடவுச்சீட்டு மற்றும் விசாக்கள் வழங்குவது உடனடியாக மீண்டும் தொடங்கும் என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

அதன்படி, அமைப்பை மீட் டெடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேலும் தகவலுக்கு, பொதுமக்கள் 011 210 1540 / 011 210 1545 என்ற எண்களில் திணைக்களத்தை தொடர்பு கொள்ளலாம் அல்லது திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடலாம். (நி)

# போதையில் சாரத்தியம் பிலியந்தலையில் 7 பேர் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் பயன்படுத்திய நிலையில் தனியார் பேருந்துகளில் பணியில் ஈடுபட்டிருந்த 7 சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பிலியந்தலை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிலியந்தலை பிரதான பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் மற்றும் பிலியந்தலை ஊடாகப் பயணிக்கும் தனியார் பேருந்து ஊழியர்களை இலக்காகக் கொண்டு இந்த விசேட சோதனை நடத்தப்பட்டது.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் விசேட பேருந்து ஒன்றின் உதவியுடன் இந்த மருத்துவப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

மொத்தம் 170 சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பரிசோதிக்கப்பட்டனர். இவர்களில் 7 பேர் போதைப்பொருள் பயன்படுத்தியிருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து கைது செய்யப்பட்டனர்.

பிலியந்தலை காவல் துறையினரும் நுகேகொடை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனமும் இணைந்து சுமார் 5 மணிநேரம் இந்தச் சோதனையை முன்னெடுத்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட உள்ளனர்.

பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான திடீர் சோதனைகள் தொடரும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# வைப்பிலிடப்பட்டது அஸ்வெசும கொடுப்பனவு

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் பயனாளிகளுக்கான பெப்ரவரி மாதக் கொடுப் பனவுகள் நேற்று வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டதாக நிதி அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தகுதியுள்ள அனைத்துப் பயனாளிகளுக்குமான பெப்ரவரி மாதத்திற்குரிய நிதி ஒதுக்கீடுகள் வங்கிகளுக்கு விடு விக்கப்பட்டுள்ளன.

அதன்படி, பயனாளர்கள் தமது வங்கிக் கணக்கினூடாக கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3354

### நித்தியானந்தன்

அப்புறம் என்னப்பா
பொங்கல் எல்லாம் எப்படி போச்சு



ஏன் கேட்கிறாய் வழக்கம் போல
வாய் வழியாகத் தான்

### அகிலா

ஏங்க உங்களை டைனிங் டேபிளில வைச்சு
நான் பக்கத்தில் நின்று என் கையால் சமைச்சதை
பரிமாறுறேனே... இந்த பீலிங் எப்படி இருக்கு?



தெய்வம் நின்று கொல்லும் என்று சொல்வாங்களே
அது இது தானா

### அழகீசன்


ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல்
நேரங்களில் மட்டுமே



தென்படும் அரிய வகை வாகனம்

### கஜவர்ஷன்

மகன்: அப்பா கணக்கு சொல்லித் தாங்க அப்பா
அப்பா: எனக்கு கணக்கு தெரியாதுப்பா. எங்க அப்பா
அம்மா என்னை படிக்க வைக்கவில்லை



மகன்: அப்பா உனக்கு மட்டும் எவ்வளவு நல்ல
அப்பா அம்மா கிடைச்சிருக்காங்க

### சாத்வீகா


மேனேஜர்: என்னைப் பற்றி Feedback கேட்டால்
சில்லறை பையன் என்று எழுதி இருக்கிறாய்



ஆம்... சில்லறை என்றால் நாணயம்...
நாணயம் மிக்க மனிதர் என்று கூறினேன்.

### மதுமிதா

மற்றவர்கள் நம்மிடம் மணி என்னாச்சு என்று
கேட்டால் சரியா டைம் சொல்லி விடுறோம்



அதே கேள்வியை பொண்டாட்டி கேட்டால் மட்டும்
ஏனோ தெரியவில்லை...
உடம்பெல்லாம் உதறல் எடுக்குது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி மின்னஞ்சல்கள்; எச்சரிக்கும் பொலிஸார்

**(கொழும்பு) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரின் பெயரைப் பயன்படுத்தி, திட்டமிட்ட குழுவொன்று போலி மின்னஞ்சல்களை அனுப்பி வருவதாக இலங்கை பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் பெயரைப் பயன்படுத்தி, மிகவும் தந்திரமான முறையில் இந்த மின்னஞ்சல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதில் "NationWide Could, Protection 24/7" போன்ற வாசகங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்களை ஏமாற்றிப் பணத்தைச் சூறையாடுவது அல்லது அவர்களின் தனிப்பட்ட தகவல்களைத் திருடுவதுமே இந்த மோசடியின் முக்கிய நோக்கம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

noucinatacha20@gmail.com, police.cid.lk@gmail.com ஆகிய மின்னஞ்சல் முகவரிகளிலிருந்து வரும் செய்திகள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த மின்னஞ்சல் முகவரிகள் எவையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சொந்தமானவை அல்ல என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

உங்களின் வங்கித் தகவல்கள், அடையாள அட்டை விபரங்கள் அல்லது கடவுச்சொற்களை இந்த மின்னஞ்சல்களுக்குப் பதிலளிப்பதன் மூலம் வழங்க வேண்டாம்.

இத்தகைய சந்தேகத்திற்குரிய மின்னஞ்சல்களில் வரும் இணைப்புகளை கிளிக் செய்வதைத் தவிர்க்கவும். (நி)

# தற்போதைய அரசியல் சூழலுக்கு பலமான எதிரணி அவசியம்

## ருவான் கருத்து



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைவதன் மூலம் நாட்டில் வலுவானதொரு கூட்டு எதிரணியைக் கட்டியெழுப்ப முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இரு கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் தற்போது பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேச்சுகள் மிகவும் சாதகமான திசையை நோக்கி நகர்கின்றன. இதிலிருந்து சிறந்ததொரு முடிவை எதிர்பார்க்கின்றோம்.

கிராம மட்டங்களில் பிளவுபட்டிருந்த கட்சி ஆதரவாளர்கள் தற்போது தாமாகவே ஒன்றிணைந்து வருகின்றனர். தலைவர்களும் அதேபோல் பேதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது.

எனவே, அடுத்து வரும் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கைகோர்ப்பதற்கான சூழல் கனிந்துள்ளது.

நாம் இரு தரப்பும் இணைந்த பின்னர், ஏனைய ஒத்த கருத்துடைய தரப்புகளையும் உள்வாங்கி ஒரு பலமான பொது எதிரணியைக் கட்டியெழுப்ப முடியும். அதுவே தற்போதைய அரசியல் சூழலுக்கு அவசியமானது என்றும் அவர் வலியுறுத்தினார். (நி)

# க.பொ.த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்




(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கான புதிய முயற்சியை கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதற்கமைவாக க.பொ. த உயர்தரப் பரீட்சையில் அதிக இசட்- புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கே இவ்வாறு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளன.

இந்த திட்டத்தின் மூலம் குறித்த மாணவர்கள் மதிப்புமிக்க சர்வதேச பல்கலைக்கழகங்களில் தங்கள் விருப்பப்படி பட்டப்படிப்புகளைப் தொடர முடியும்.

குறித்த திட்டத்தின் கீழ் வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டப்படிப்புகளுக்காக மொத்தம் 200 புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் என சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

# இந்த ஆண்டு இதுவரை நீரில் மூழ்கி 24 பேர் பலி

(கொழும்பு)

இந்த ஆண்டு இதுவரை நீரில் மூழ்கி 24 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, இதுபோன்ற விபத்துகள் அடிக்கடி நிகழும் அதிக ஆபத்துள்ள பகுதிகளை இலக்காகக் கொண்டு, பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விசேட விழிப்புணர்வு மற்றும் உயிர்காக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எஃப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும் போது பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்தக் கருத்துக்களைக் குறிப்பிட்டார். (நி)

# 900 சிறுவர் புற்றுநோயாளர்கள் வருடாந்தம் நாட்டில் அடையாளம்

(கொழும்பு)

நாட்டில் வருடாந்தம் சராசரியாக 900 சிறுவர் புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுவதோடு, 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய புற்று நோய் பதிவேட்டுத் தரவுகளுக்கமைய 940 சிறுவர் புற்றுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன், 2021 ஆம் ஆண்டில் 199 சிறுவர்கள் இந்நோயினால் உயிரிழந்துள்ளதாக சிறுவர் புற்றுநோய் அறுவை சிகிச்சை வைத்திய நிபுணர் மஹெந்திர சோமதிலக தெரிவித்தார்.

பெப்ரவரி 15ஆம் திகதி சர்வதேச சிறுவர் புற்றுநோய் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய ரீதியில் சிறுவர்களுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் உயிரிழப்புகளில் புற்றுநோய் குறிப்பிடத்தக்கக் காரணமாக உள்ளது. இது ஆண்டுதோறும் அதிகரித்துவருவதையும் அவதானிக்க முடிகிறது. உலக அளவில் வருடாந்தம் சுமார் 4 இலட்சம் புதிய புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சிறுவர்களிடையே ஏற்படும் புற்றுநோய்களில் "லியுகேமியா" எனப்படும் இரத்தப் புற்றுநோய் முதலிடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து நிணநீர் புற்றுநோய், மூளைக்கட்டி மற்றும் எலும்புப் புற்றுநோய் என்பனவும் பரவலாக அடையாளம் காணப்படுகின்றன. இவ்வாறான நோய்கள் பிரதானமாக சிறுவர்களுக்கு மாத்திரமே ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

வயது வந்தவர்களுக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான பிரதான காரணிகள் கண்டறியப்பட்டுள்ள போதிலும் சிறுவர்களைப் பாதிக்கும் புற்று நோய்களுக்கான உறுதிப்படுத்தப்பட்ட காரணிகள் இதுவரை கண்டறியப்படவில்லை. இருப்பினும், மாறிவரும் வாழ்க்கை முறைமை, சூழல் மாசு மற்றும் மரபணுத்தாக்கங்கள் இதற்கு ஏதுவாக அமையலாம்.

நோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டு சிகிச்சைகளைத் தொடர்ச்சியாகப் பெறுவதன் யாகக் குணப்படுத்தக்கூடிய வாய்ப்பு 80 சதவீதமாகக் காணப்படுகிறது. எனினும், இலங்கையில் துரதிஷ்டவசமாக நோய் முற்றிய நிலையிலேயே பிள்ளைகள் அழைத்து வரப்படுகின்றமை வருந்தத்தக்க விடயமாகும்.

ஆகவே, சிறுவர்களுக்கு நீடித்த தலைவலி, வாந்தி, குமட்டல் உள்ளிட்ட உடல் உபாதைகள் காணப்படின் அவற்றை அலட்சியப்படுத்தாது பெற்றோர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இத்தகைய கவனக்குறைவினால் இறுதியாகப் பிள்ளைகள் மரணத்தைத் தழுவவோ அல்லது அங்கவீனர்களாக மாற வாய்ப்புள்ளது.

குறிப்பாக மூளைப் புற்றுநோயால் பக்கவாதம் ஏற்பட வாய்ப்புள்ளதோடு, எலும்புப் புற்றுநோயால் கை, கால்கள் போன்ற உறுப்புகளை நீக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். எனவே, சிறுவர்களைப் பாதிக்கும் புற்றுநோய் தொடர்பில் சமூகம் விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியம் என




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகேஸ்வர பூசை

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு சிவபூமி அறக்கட்டளையால் சிவராத்திரி நன்னாளான எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கீரிமலை சிவபூமி மடத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

## சாவ/ கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் சேவைகள் விஸ்தரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் சேவைகள் கொடிகாமம் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தின் கொடிகாமம், கெற்பேலி, மிருசுவில், விடத்தற்பளை மற்றும் வரணி போன்ற பகுதிகளில் அதிகளவிலான கால்நடை வளர்ப்பாளர்கள் காணப்படுவதாலும், கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை சாவகச்சேரி நகரை மையப்படுத்தி அமைந்திருப்பதாலும் கால்நடை வளர்ப்பாளர்களின் நலன் கருதி கொடிகாமம் பகுதிக்கும் நடமாடும் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விசேட சேவையானது வாராந்தம் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் கொடிகாமத்தில் கால்நடை வளர்ப்பாளர்களுக்காக இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-30)

# கொக்கிளாய் பாலம் அமைக்க அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் பிமல் உறுதி





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை ஆகிய பகுதிகளை இணைக்கும் இணைப்புப் பாலத்தை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

கொக்கிளாய் பாலத்தை அமைப்பதற்கான சாத்தியவள அறிக்கையினை எதிர்வரும் மேமாதத்திற்குள் துறைசார்ந்தவர்கள் கையளித்தால் எதிர்வரும் 2027 ஆம் ஆண்டிக்கான வரவு-செலவுத்திட்டத்தில் குறித்த கொக்கிளாய் - புல்மோட்டை இணைப்புப் பாலத்தை அமைப்பதற்கு தம்மால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகரஅபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க பதிலளித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் 11.02. 2026 நேற்று இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (நி)

# நாட்டின் அனைத்து பரிவர்த்தனைகளும் இலங்கை ரூபாவில் நடத்தப்பட வேண்டும்

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் வசிப்பவர்களுக்கிடையேயான அனைத்து பரிவர்த்தனைகளும் இலங்கை ரூபாவில் நடத்தப்பட வேண்டும் என இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

இலங்கையில் பலர் உள்ளூர் அளவில் வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனை செய்து வரும் சில சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்டி இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பில் மேலும், வணிகர்கள் கடன் அல்லது பற்று அட்டைகள் உட்பட வெளிநாட்டு நாணய கணக்குகளில் பணம் செலுத்துவதற்கு எந்த அங்கீகாரமும் வழங்கப்படவில்லை.

உள்ளூர் வணிகருக்கு வெளிநாட்டு நாணயத்தில் பணம் செலுத்தும் எந்தவொரு குடியிருப்பாளரும் அல்லது அங்கீகாரமின்றி அத்தகைய கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் எந்தவொரு வணிகரும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின்படி ஒரு குற்றத்தைச் செய்கிறார்கள்.

இந்த நிலையில் அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால், ரூ. 25 மில்லியன் வரை அபராதம் மற்றும் மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது இரண்டையும் எதிர்கொள்ள நேரிடும்.

கடுமையான சட்ட விளைவுகளைத் தவிர்க்க, பொதுமக்கள் மற்றும் வணிக சமூகம் இந்த சட்டப்பூர்வ தேவைகளை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# கனடா பாடசாலையில் துப்பாக்கிச்சூடு



## இலங்கை அரசாங்கம் இரங்கல்!

(ஒட்டாவா)

கனடாவின் பிரிட்டிஷ் கொலம் பியாவில் உள்ள பாடசாலையொன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அந்நாட்டு அரசாங்கத்திற்கு தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக அமைச்சர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து எக்ஸில் பதிவிட்டுள்ள அமைச்சர் விஜித ஹேரத்,

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள ஒரு பாடசாலையில் நடந்த துயரமான துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தால் மிகவும் வருத்தமடைந்தேன்.

இலங்கை அரசு மற்றும் மக்கள் சார்பாக, தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு எனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன். பாதிக்கப்பட்ட அனைவருடனும் எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் உள்ளன.

இந்த ஆழ்ந்த கடினமான நேரத்தில் அவர்கள் வலிமை, ஆறுதல் மற்றும் அமைதியைப் பெறட்டும் என்று கூறியுள்ளார். (நி)


## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-14, பொன்னப்பா ஒழுங்கை, 8 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் த.துரைராஜா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், கனடாவைச் சேர்ந்தவரும் இல.42, பண்டாரநாயக்கா மாவத்தை, கொழும்பு 12இல் தங்கியிருக்கும் கருணானந்தன் இந்திரன் என்பவர் 10.07.2025 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.காயத்திரி அகிலன் முகதாவில் 576ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரகடன உறுதி மூலம் இவ்வாதனம் தனது சித்தப்பாவான தம்பாப்பிள்ளை துரைராஜாவிற்கு 16.08.1948 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அம்பலவாணர் சிவகுருநாதன் முகதாவில் 51ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி சொந்தமாகி குறித்த தம்பாப்பிள்ளை துரைராஜாவும் மனைவி பூமணியும் 1963 ஆம் ஆண்டளவில் தனது தாயாரான கருணானந்தன் பொன்மணிக்கு எழுதப்பட்டு தனது தாயார் அதில் வீடொன்றைக்கட்டி ஆண்டனுபவித்து பின்னர் 1966 ஆம் ஆண்டளவில் தனக்கு நன்கொடையளித்திருந்தார் என்றும் எனினும் தனது பெயரில் நிறைவேற்றப்பட்ட உறுதி தொடர்பில் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் கிடைக்கப்பெறவில்லை எனவும் குறிப்பிட்டு பிரகடனம் ஒன்றினை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த ஆதனத்தை, கருணானந்தன் இந்திரன் தனது அற்றோனித்தத் துவக்காரரான இல.659, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கருணநாதன் உருத்திரன் மறுநாமம் கருணானந்தன் உருத்திரன் மூலம் 28.07.2025ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.காயத்திரி அகிலன் முகதாவில் 4551ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இல.8, பொன்னப்பா ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசையா சண்முகநாதனும் பெண் கனகாம்பிகைக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "ஆலடி" நிலப்பரப்பு 1 குளி 7.55 இது நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் 2025.07.09ஆம் திகதியிட்டு வரைந்த 6366ஆம் இலக்கப் படத்தில் துண்டு 1 ஆக காட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 7.55 உம் வீடும். இதற்கு எல்லைகள்,

கிழக்கு:- பொன்னப்பா வீதியும் கந்தசாமி தியாகநாதனின் ஆதனமும்
வடக்கு:-தியாகராசா தேவராசாவின் ஆதனம்
மேற்கு:- அருட்பிரகாசம் பெண் சகுந்தலாதேவியின் ஆதனம்
தெற்கு:- கந்தசாமி தியாகநாதனின் ஆதனமும் ஒழுங்கையும் இவ்வெல்லைப்படி இதடங்கலும் இதற்குரியவைகளும்.

தற்போது இராசையா சண்முகநாதனும் பெண் கனகாம்பிகையும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது இராசையா சண்முகநாதனும் பெண் கனகாம்பிகையும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.


(C-4386)

**மாநகர முதல்வர்,**
**யாழ்ப்பாண மாநகர சபை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கேரளாவில் ஈஷா மஹா சிவராத்திரி ஏற்பாடுகள் தீவிரம்



(டில்லி)
கேரளாவில் உள்ள 29 முக்கிய கோயில்களில் ஈஷா மஹா சிவராத்திரி விழா நேரலை செய்யப் பட்டுக் கொண்டாடப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடு களை கேரள மாநிலத்தில் இருக்கும் ஈஷா தன்னார் வலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

கோவை ஈஷா யோக மையத்தில் அமைந்துள்ள ஆதியோகி வளாகத்தில், எதிர்வரும் 15ஆம் திகதி, சத்குருவின் முன்னிலை யில் நடைபெறும் பிரம் மாண்டமான மஹா சிவ ராத்திரி விழாவில் கேரள மாநில மக்களும் பங்கேற் கும் வகையில், கேரள மாநிலம் முழுவதும் உள்ள 29 கோயில்களில் இவ்விழா நேரடி ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

கோயம்புத்தூர் வெள் ளியங்கிரி மலை அடி வாரத்தில் உள்ள ஆதி யோகி முன்பு நடைபெறும் இந்த மஹா சிவராத்திரி விழா, உலகிலேயே அதிக மக்களால் நேர லையில் பார்க்கப்படும் மிகப்பெரிய ஆன்மீக நிகழ்வுகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

சுமார் 24 மொழி களில், 100இற்கும் மேற் பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் இணையதளங்கள் வழியாக 14 கோடிக்கும் அதிகமான மக்கள் இந்த விழாவைக் காண்பார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது. ஆன்மீக முக்கியத் துவம் வாய்ந்த மஹா சிவராத்திரி நாள் இரவில் மஹாமந்திர உச்சாடனம் மற்றும் சக்திவாய்ந்த தியானங்களை சத் குரு வழிநடத்த உள் ளார்.

இதனுடன் மக்களை இரவு முழுவதும் விழிப் புணர்வுடன் வைத்துக் கொள்ள உதவும் வகை யில் பாரத பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது. (3)

## அமெரிக்காவின் அதி… ஆட்டம் காணும் …

### பொருளாதார நிபுணர்கள் …

(வோஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிற நாடுகளுடனான வர்த்தகத்தில் மேற்கொண்டு வரும் அதிரடி நடவடிக்கைகள் சர்வதேச சந்தையில் நிலையற்ற தன்மையை உருவாக்கி வருவதாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



அந்தவகையில் ட்ரம்ப் தென்கொரியாவுடன் ஏற் கனவே எட்டப்பட்ட வர்த் தக ஒப்பந்தங்களின் படி, இறக்குமதி வரி 15 வீத மாகக் குறைக்கப்பட்டிருந் தது.

எனினும், தென்கொரியா தனது வாக்குறுதிகளை நிறை

வேற்… அந்த… அதிக…

## கனேடியப் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு 18 வயதுடைய சந்தேக நபர் அடையாளம்

(ஒட்டாவா)
கனடாவின் மேற்கு மாநி லமான பிரிட்டிஷ் கொலம்பி யாவிலுள்ள பாடசாலை யொன்றில் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்ததோடு, 25 பேர் காயமடைந்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் 18 வயதுடைய நபர் சந்தேக நபராக பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள் ளார்.

சந்தேக நபரான ஜெஸ்ஸி வான் ரூட்ஸீலார் என்கின்ற இந்த நபர் சம்பவ இடத்தி

லே… துப்பா… உயிர்… தெரி…
மு… மற்று… டுக் … னர் … லைக்… தவர் … துப்ப… ளார்.

## துருக்கி பாராளுமன்றத்தில் கடும் வாக்குவாதம்; கைகலப்பாக மாறியதில் பெரும் பரபரப்பு

(அங்காரா)
துருக்கி பாராளுமன் றத்தில் ஆளுங்கட்சி மற் றும் எதிர்க்கட்சி உறுப்பினர் களுக்கு இடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதம், கைக லப்பாக மாறியதில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமைச்சரவை மாற்றத் தின்போது சர்ச்சைக்குரிய ஒருவரை நீதி அமைச்சராக நியமித்ததே இந்த மோத லுக்கு முக்கிய காரணமா கும் என சர்வதேச செய்தி



கள் குறிப்பிடுகின்றன.

துருக்கி ஜனாதிபதி ரையிப் எர்டோகன், இஸ்தான்புல் தலைமை அரச சட்டத்தரணி யான அகின் குர்லெக்கை புதிய நீதி அமைச்சராக நியமித்திருந் தார்.

குர்லெக் பாராளுமன்றத்தில் பதவியேற்பதைத் தடுப்பதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முற்பட்டபோது இருதரப்புக் கும் இடையே மோதல் வெடித் தது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் சம்பவங்கள் காணொளிகளில் பதிவாகியுள்ளன.

புதிய நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அகின் குர்லெக், அரச சட்டத்தர ணியாக இருந்தபோது பிரதான எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி உறுப்பினர் களுக்கு எதிராக அரசியல் உள்நோக்கத்துடன் பல வழக்குகளை முன்னெ டுத்தவர் என எதிர்க்கட்சி கள் குற்றம்சாட்டியிருந் தன.

பதவி விலகிய அமைச் சர்கள் தாமாகவே முன் வந்து பதவியிலிருந்து விலகியதாக அரசாங்கம் தெரிவித்துள்ள போதிலும், இந்த அதிரடி மாற்றத் திற்கான உத்தியோகபூர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...திரடி வரி விதிப்பால் ... உலக வர்த்தகம் ... சுட்டிக்காட்டு



வேற்றவில்லை எனக்கூறி, தற்போது அந்த வரியை மீண்டும் 25 வீதமாக அதிகரிக்க தீர்மானித்துள்ளார்.

இதனால் ஹூண்டாய் போன்ற நிறுவனங்களின் பங்குகள் சரிவடைந்துள்ளன.

ரஷ்யாவிடமிருந்து மலிவு விலையில் மசகு எண்ணெய் கொள்வனவு செய்வதை நிறுத்துமாறு இந்தியாவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை இந்தியா நிராகரித்ததை அடுத்து, இந்திய மருந்துப் பொருட்கள் மற்றும் உருக்கு இறக்குமதி மீது 25 முதல் 50 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவுடனான வர்த்தக முறுகல் முற்றியுள்ள நிலையில், இறக்குமதி வரி 145 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலடியாக சீனாவும் அமெரிக்கப் பொருட்களுக்குக் கடுமையான வரி விதித்துள்ளதுடன், சில முக்கியத் தாதுப் பொருட்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யவும் தடைவிதித்துள்ளது.

அத்துடன் ஜப்பான், பிரேசில், கனடா மற்றும் மெக்சிகோ போன்ற நாடுகளும் ட்ரம்பின் இந்த "அமெரிக்காவிற்கே முன்னுரிமை" என்ற கொள்கையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஜப்பானின் வாகன இறக்குமதி வரி மீண்டும் 25 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த வரிவிதிப்புகளால் அமெரிக்காவிற்குள் இறக்குமதி செய்யப்படும் பொர்ருட்களின் விலைகள் சடுதியாக உயர்ந்துள்ளன.

குறிப்பாக வாகனங்களின் விலைகள் 2000 முதல் 3000 டொலர்கள் வரை அதிகரித்துள்ளன.


இது அமெரிக்க நுகர்வோரையே நேரடியாகப் பாதிப்பதுடன், உலகளாவிய விநியோகச் சங்கிலியில் பாரிய குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

ட்ரம்பின் இந்த அதிரடி நகர்வுகள் அமெரிக்க உற்பத்திகளை மேம்படுத்தும் எனக் கூறப்பட்டாலும், நடைமுறையில் இது நட்பு நாடுகளுடனான உறவை விரிசலடையச் செய்வதுடன் சர்வதேச சந்தையில் நிலையற்ற தன்மையையே உருவாக்கி வருவதாகப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (3)

---

லேயே தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு உயிரிழந்து கிடந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதலில் தனது வீட்டில் தாய் மற்றும் தம்பி ஆகியோரைச் சுட்டுக் கொன்ற சந்தேக நபர், பின்னர் அருகிலுள்ள பாடசாலைக்குச் சென்று அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.



பொலிஸார் சம்பவ இடத்திற்குச் விரைந்த போது, சந்தேகநபர் உயிரிழந்து கிடந்துள்ளார்.

பாடசாலையில் உயிரிழந்தவர்களில், 39 வயதுடைய பெண் கல்வியாளர் ஒருவரும், 12 வயதுடைய பெண் மாணவர்கள் மூவரும், 12 மற்றும் 13 வயதுடைய ஆண் மாணவர்கள் இருவரும் அடங் குவர்.

சந்தேகநபர் கடந்த சில ஆண்டுகளாக மனநலப் பாதிப்புகளுக்காகப் பல முறை பொலிஸாரின் கண்காணிப்பில் இருந்துள்ளார்.


அத்துடன் 4 ஆண்டுகளுக்கு முன்பு பாதியில் விலகியவர் என்பதும் தெரிய வந்துள்ளது. (3)

---

...னெ
...கட்சி
...ிருந்
...மைச்
...முன்
...நந்து
...ங்கம்
...லும்,
...ற்றத்
...பூர்வ

காரணங்கள் வெளியிடப்படவில்லை.

துருக்கியில் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியுடனான அமைதி முன்னெடுப்புகள் குறித்த விவாதங்கள் இடம்பெற்று வரும் சூழலில் இந்த அமைச்சரவை மாற்றம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



---

## போராட்டக்காரர்கள் மீதான ஒடுக்குமுறை மன்னிப்பு கோரினார் ஈரான் ஜனாதிபதி

(டெஹ்ரான்)


ஈரானில் விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்தாண்டு டிசம்பரில் தொடங்கிய போராட்டம், பின்னர் அந்நாட்டு ஆட்சிக்கு எதிரான போராட்டமாக மாறியது.

இதனால் அரசுக்கும் மக்களுக்கும் இடையே கடும் மோதல் போக்கு நிலவியது. இதனால் போராட்டக்காரர்கள் மீது அரசு தாக்குதலையும் தொடுத்தது. இந்தத் தாக்குதலில் சுமார் 3000 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் போராட்டங்களின்போது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட கடுமையான ஒடுக்குமுறை மற்றும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்காக ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் மன்னிப்புக் கோரியுள்ளார்.

ஈரானின் 47 ஆவது புரட்சி தின விழாவில் உரையாற்றிய அவர், போராட்டங்களின்போது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தனது வருத்தத்தைத் தெரிவிப்பதாகவும், நடந்த சம்பவங்களுக்காக தாங்கள் "வெட்கப்படுவதாகவும்" குறிப்பிட்டார்.

"இச்சம்பவங்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவ நாங்கள் கடமைப்பட்டுள்ளோம், அத்துடன் நாங்கள் மக்களுடன் மோதலை விரும்பவில்லை" என்றும் தெரிவித்தார். (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய லொத்தர் சபையின் முகவர்களுக்கான காப்புறுதி அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் வவுனியா, மன்னார் மாவட்ட பிராந்திய முகாமையாளர் எஸ்.பாரதன் உட்பட வவுனியா மாவட்ட விற்பனை மேம்படுத்தல் அதிகாரி மலித் விஜயதுங்க, வவுனியா மாவட்ட விற்பனை முகவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



"நலம் தரும் வேம்பு" நூல் வெளியீடு அண்மையில் சுன்னாகம் பொது நூலகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் எழுத்தாளர்கள், ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரும் பங்கேற்றிருந்தனர்.


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்: மகம்
கி-பா: 27 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA,Pvt
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16508

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
1இல்செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்- A/L.கனடா
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16509

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்:அத்தம்
3இல் சூரி செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:BSc,Business(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16510

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்:சுவாதி
உயரம்:5'3"
தகைமை/தொழில்-Diploma, Pvt Work
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16512

பிறப்பு: 1980- இந்து
நட்சத்திரம்:ரேவதி
7 இல் சூரி செவ்
உயரம்:5'9"
தகைமை/தொழில்: MSO
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16515

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 2002-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L,Teacher (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16518

பிறப்பு: 1986-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Bsc,Nursing(USA)
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/16521

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Cashier (pvt)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர், தகுதியான ஆண்
தொ.இ: G/16522

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
12இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Project Manager (German)
எதிர்பார்ப்பு: German மட்டும்
தொ.இ: G/16526

பிறப்பு: 1994 - இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
கி.பா: 29
உயரம்: 5'
தகைமை/தொழில்: Diploma, ஆயுள் வேதம், Cleark
எதிர்பார்ப்பு அரச உத்தியோகம்
தொ.இ: G/16527

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 538



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மன நிறைவு

ஒரு பெரிய அரசன் இருந்தான். யயாதி என்று பெயர்! கேள்விப்பட்டிருப்பீர்கள்! அவனுக்கு நூறு வயது ஆகியது! வாழ்க்கையிலே அனுபவிக்க வேண்டியதை எல்லாம் அனுபவித்து விட்டான். ஒரு நாள் மரணம் அவனைத் தேடி வந்தது. "இதோ பாருப்பா. உனக்கு நேரம் வந்து விட்டது. உன்னை அழைத்துக்கொண்டுப்போகத்தான்வந்திருக்கிறேன்புறப்படு!"என்றது.

இவன் பெரிய ராஜாதான். போர்களிலே வீரத்தையெல்லாம் காட்டி இருக்கிறான். இருந்தாலும் இப்போது நடுங்க ஆரம்பித்தான். "என்னது இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டாய். நான் ஒரு நூறு வருடம் தானே வாழ்ந்து முடித்திருக்கிறேன். அதுக்குள்ளே அழைத்துக்கொண்டு போவதற்கு வந்துவிட்டாயே" என்றான். "என்னப்பா இப்படி சொல்கிறாய். உன் பிள்ளைகள் எல்லாம் தாத்தாவாகி விட்டார்கள். இன்னும் உனக்கு என்ன வேண்டியிருக்கு இந்த உலகத்திலே?" என்றது அந்த மரணம். அந்த ராஜாவுக்கு நூறு மனைவிகள் - நூறு பிள்ளைகள்.

அதனாலே ஒரு யோசனை செய்தான். அப்புறம் சொன்னான். "இதோ பார். நீ வந்துவிட்டாய் வெறுங்கையோடு திரும்பிப் போகமாட்டாய் என்று எனக்குத் தெரியும் என் பிள்ளைகள் நூறு பேர் இருக்கிறார்கள். அவர்களிலே யாரையாவது கேட்டுப் பார்க்கிறேன். எனக்குப் பதிலாக நீங்கள் யாராவது போகிறீர்களா என்று. யாரையாவது ஒருவரை சம்மதிக்க வைத்து அனுப்புகிறேன். என்னை இன்னும் ஒரு நூறு வருடம் வாழ விட்டுவிடேன்!" என்றான். மரணம் சொல்லியது: "உனக்குப் பதிலாக யாராவது ஒருவர் என் கூட வந்தால் போதும். இருந்தாலும் நீ எல்லோருக்கும் அப்பா. எல்லோரையும்விட நீதான் அதிக நாள் வாழ்ந்திருக்கிறாய். எல்லாவற்றையும் அனுபவித்து இருக்கிறாய். அப்படி இருக்கும்போது நீயே இப்படி இருந்தால் உன் பிள்ளைகள் எப்படி என்னுடன் வர சம்மதிக்கும்?" என்றது.

இருந்தாலும் அந்த ராஜாவுக்கு நம்பிக்கை இருந்தது. பிள்ளைகளை ஒவ்வொருத்தராக அழைத்தான். கேட்டுப் பார்த்தான். மூத்த பிள்ளைகள் எல்லாம் ஒன்றுமே பேசவில்லை பேசாமல் நழுவிப் போக ஆரம்பித்தார்கள்.

கடைசி மகன் ஒருவன். அவனுக்கு 16 வயதுதான் ஆகிறது. அவன் முன்னால் வந்தான். "நான் தயார்... என்னை அழைத்துக்கொண்டுப் போ!" என்றான். இவனைப் பார்த்ததும் மரணமே இரக்கப்பட ஆரம்பித்தது. "என்னப்பா இது, ஒன்றும் தெரியாதவனாக இருக்கிறியே. உன்னைவிட பல மடங்கு வயது அதிகமான உன்னுடைய மூத்த சகோதரர்கள் 99 பேர் அவர்கள் எல்லாம் இன்னும் இந்த உலகத்திலே வாழணும் என்று ஆசைப் படுகிறார்கள். நீ இப்படி சொல்கிறீயே. நல்லா யோசித்து சொல்லு!" என்றது. நான் நன்றாக யோசித்துத்தான் சொல்கிறேன். என் அப்பா நூறு வருடம் வாழ்ந்திருக்கிறார். அப்படியும் திருப்தியடையவில்லை" என் சகோதரர்கள் எல்லாம் என்னைவிட அதிக காலம் இந்த உலகத்திலே வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் திருப்தி ஏற்படவில்லை! இதைப் பார்க்கும்போது எனக்கு ஒரு விடயம் நன்றாகப் புரிகிறது. அதாவது நூறு வருடம்வாழ்ந்தால்கூட எனக்கும்திருப்தி ஏற்படப் போவதில்லை. அப்படி இருக்கும்போது நான் இப்போதே போனால் என்ன. இன்னும் 90 வருடம் கழித்துப் போனால் என்ன பேசாமல் என்னை அழைத்துக்கொண்டுப் போ!" என்றான். மரணம் அந்தப் பையனை அழைத்துக்கொண்டுப் போய் விட்டது. அதன்பின் ஒரு நூறு வருடம் கழித்து அந்த மரணம் மறுபடியும் திரும்பி வந்தது. அந்த ராஜாவைப் பார்த்தது. இப்பவும் அந்த ராஜா அதே நிலைமையிலேதான் இருந்தான். இப்போது அவன் என்ன சொல்கிறான் தெரியுமா?

இந்த நூறு வருடம் போனதே தெரியவில்லை. அவ்வளவு வேகமாகப் போய் விட்டது. என்னாலே நிதானமாக அனுபவிக்க முடியவில்லை. எனனுடைய வயதான பிள்ளைகள் எல்லாம் ஏற்கனவே இறந்து போய் விட்டார்கள். இப்போது எனக்கு இன்னொரு தலைமுறை வந்துவிட்டது. இப்போது எனக்குப் பதிலாக இன்னொருத்தனை அனுப்புகிறேன். அவனை அழைத்துக்கொண்டு என்னை இன்னும் ஒரு நூறு வருடம் வாழவிடேன்!" என்று கேட்டுக்கொண்டான். மரணம் சரி என்று சொல்லி வேறு ஒருவனை அழைத்துக்கொண்டுப் போய் விட்டது. இப்படியே ஒன்பது தடவை ஆகிவிட்டது. இப்படியே அந்த ராஜா தொள்ளாயிரம் வருடம் அதிகமாக வாழ்ந்தான். பத்தாவது தடவையாக மரணம் வந்து நின்றது. இப்போது அவன் சொன்னான்.

நீ முதல் தடவை வந்தபோது நான் எப்படி திருப்தி அடையாதவனாக இருந்தேனோ. அதே நிலைமையிலேதான் இப்போதும் இருக்கிறேன்.

இப்போது எனக்கு உன் கூட வர விருப்பம் இல்லை. இருந்தாலும் வருகிறேன். ஏன்னென்றால் திரும்பத் திரும்ப எத்தனை தடவைதான் உன்னிடம் சலுகை கேட்பது? கேட்டதே ரொம்ப அதிகம். இருந்தாலும் ஒரு விடயத்தை இப்போது தெளிவாகப் புரிந்து கொண்டேன். ஒரு ஆயிரம் வருடத்திலே என்னாலே திருப்தியடைய முடியவில்லை என்றால் பத்தாயிரம் வருடம் இந்த உலகத்திலே வாழ்ந்தால்கூட என்னால் திருப்தியடைய முடியாது! புறப்படு போகலாம்!" என்றான்.

இதுதான் சார். நாம் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கின்ற உலக வாழ்க்கை! இதை நாம் புரிந்துகொள்வதற்காகத்தான் ஒரு பெரியவர் (ரஜனீஷ்) இந்தக் கதையை நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார். இந்தக் காலத்து குடும்பஸ்தர் ஒருவர் அவரைத் தேடிக்கொண்டு ஒருநாள் "மரணம்" வந்தது. வந்து அவர் முன்னாடி நின்றது. "நான்தான் மரணம் வந்திருக்கிறேன். உன்னை அழைத்துக்கொண்டுப் போக!" என்றது. இவருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே பளார் என்று அது கன்னத்திலே அறைந்துவிட்டார்.

மரணம் கன்னத்தைத் தடவிக்கொண்டே "ஏன் என்னை அறைந்தாய்" என்றது. "பின்னே என்ன... எவ்வளவு காலமாக உனக்காகக் காத்துக் கொண்டிருப்பது? ஏன் இவ்வளவு லேட்" என்றார் அந்த ஆள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்துங்கள் - ரவிகரன் எம்.பி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொலிஸ்பிரிவிற்குட்பட்ட சில கிராமங்களில் சட்டவிரோதமான கசிப்பு உற்பத்திச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக மக்களால் தமக்கு முறைப்பாடளிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே சட்டவிரோத கசிப்பு உற்பத்திச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் வலியுறுத்தியுள்ளார். இந்நிலையில் இவ்வாறான கசிப்பு உற்பத்திச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த தம்மால் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாராளுமன்ற உறுப்பினரிடம் உறுதியளித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், முல்லைத்தீவு பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி யா/விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் பொன்னையா அரவிந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளர் விவேகானந்தன் சாரங்கன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)

# கிளிநொச்சியில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகங்களுக்கு சீல்

(தருமபுரம்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கண்டாவளை, பரந்தன் மற்றும் தருமபுரம் பகுதிகளில் அண்மையில் பொதுசுகாதார பரிசோதகர் குழுவினால் உணவு கையாளும் நிலையங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன.

குறித்த பரிசோதனையின் போது சுகாதார குறைபாடுகளுடன் காணப்பட்ட உணவுகையாளும் நிலையங்களுக்கு எதிராக கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை பரந்தனில் 5 பல்பொருள் விற்பனை நிலையங்கள், நான்கு உணவகங்கள் மற்றும் இரண்டு வெதுப்பகங்களிற்கு எதிராக 36 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்ததுடன் 2 உணவகங்கள், 1 வெதுப்பகம் என்பன குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை 14 நாட்களுக்கு தற்காலிகமாக மூடுமாறும் மன்று உத்தரவிட்டது.

அத்துடன் கண்டாவளைப் பகுதியில் இரண்டு பலசரக்கு கடைகளுக்கு 35 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் தருமபுரம் பகுதியில் 1 பலசரக்கு கடைக்கு 10ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2 உணவகங்களுக்கு 1இலட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்ததுடன் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை 14 நாட்களுக்கு தற்காலிகமாக உணவகங்களை மூடுமாறும் நீதிமன்றினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (8-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 600 | 400 | 450 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 150 | 160 | -- | 370 |
| பச்சைமிளகாய் | 300 | 450 | 300 | 300 | 300 | 400 |
| தக்காளி | 150 | 180 | 200 | 200 | 200 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 | 200 | 100 |
| கோவா | 250 | 200 | 200 | 300 | 250 | 220 |
| கரட் | 300 | 420 | 400 | 350 | 400 | 320 |
| பூசணி | 100 | 120 | 100 | 150 | 100 | 70 |
| புடோல் | 150 | 200 | 150 | 250 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 250 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 160 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 200 | 200 | 150 | -- |
| பாகற்காய் | 500 | 450 | 400 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 350 | 350 | 200 | 300 | 200 | 275 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 200 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 800 | 400 | 600 | 400 | 375 |
| லீக்ஸ் | 350 | 400 | 400 | 400 | 350 | 320 |
| பீற்றூட் | 250 | 150 | 200 | 250 | 200 | 230 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 4000 | -- | 2000 | -- |
| போஞ்சி | 300 | 250 | 300 | 400 | 300 | 350 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | 300 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 70-140 | 150 | 200 | -- | 80 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 200 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 180 | 150 | 120-180 | -- | 110 |
| இராசவள்ளி | 450 | 450 | 400 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 160 | 100 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 200 | 150 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 80 | --. | -- |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 150 | -- | 100 |

# இராசிபலன்

13.02.2026
மாசி 01 , வெள்ளிக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 2.58 மணிவரை
மூலம் பிற்பகல் 4.48 மணிவரை

சுப நேரம் 6.34-8.04 மணிவரை
இராகு காலம் 11.04-12.34 மணிவரை
அமிர்தசித்தம், ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்
கார்த்திகை, ரோகினி

வளவன்

**மேஷம்** ஆரோக்கியத்திலிருந்த குழப்பங்கள் தீரும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பூர்வீக சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்** விட்டுக் கொடுத்துச் செல்வதால் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், அலங்கார பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சந்தித்த நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம்.

**கடகம்** பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பங்கள் இடம் பெறலாம், உறவினர்களின் சந்திப்பால் உற்சாகம் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**துலாம்** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ்கூடும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், சுப காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், கௌரவமான நாள்.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**மகரம்** இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடியே கிடைக்கும்.

**மீனம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

கொஞ்சம் பசியிருக்கும்போதே உணவை நிறுத்திவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 977





**45 ஆம் அத்தியாயம்**
**"நீ என் சகோதரி!"**

நந்தினியும் வந்தியத்தேவனும் நின்ற இடத்தை அணுகி இளவரசரும் மணிமேகலையும் வந்து சேர்ந்தார்கள்.

அருகில் வரும் வரையில் இளவரசர் வந்தியத்தேவனை நோக்கிய வண்ணம் வந்தார். அருகில் வந்ததும் நந்தினியை ஏறிட்டுப் பார்த்தார்.

அவளுடைய ஒரு கன்னத்திலும் ஒரு தோளிலும் சிவந்த கோடுகள் போன்ற காயங்களிலிருந்து இரத்தம் கசிவதைக் கண்டார்.

"ஐயோ! உங்களை அந்தப் பாழாய்ப்போன புலி காயப்படுத்திவிட்டதா, என்ன?" என்றான். "ஆம், ஐயா! ஆனால் அந்தப் புலி என் உடம்பைத்தான் காயப்படுத்தியது. நெஞ்சிலே காயம் உண்டாக்கவில்லை!"

இந்த வார்த்தைகள் கரிகாலருடைய நெஞ்சிலே பாய்ந்தன. அவர் மேலே எதுவும் சொல்லுவதற்குள் மணிமேகலை நந்தினியின் அருகில் பதட்டத்துடன் சென்று, "ஆம், அக்கா! நன்றாய்க் கீறிவிட்டிருக்கிறதே! நல்ல வேளையாக அஞ்சனம் கொண்டு வந்திருக்கிறேன்.

வாருங்கள், போட்டு விடுகிறேன்! உடனே போட்டால் காயம் சீக்கிரம் குணமாகிவிடும்!" என்றாள்.

"தங்காய்! இந்த மாதிரி காயங்கள் எனக்குச் சர்வ சாதாரணம் எத்தனையோ காயங்கள் பட்டு ஆறியிருக்கின்றன. நெஞ்சில் படும் காயத்தை ஆற்ற ஏதாவது அஞ்சனம் இருக்கிறதா, சொல்!" என்றாள்.

"ஓ! இருக்கிறது, அக்கா! அதுவும் இருக்கிறது!" என்று மணிமேகலை சொல்லி விட்டு நந்தினியைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு பளிங்கு மண்டபத்துக்குச் சென்றாள்.

இளவரசரும் வந்தியத்தேவனும் சிறிது பின்னால் சென்று மண்டபத்துக்கு அருகில் ஒரு விசாலமான மாமரத்தின் அடியில் அமைந்திருந்த சலவைக்கல் மேடையில் அமர்ந்தார்கள்.

"ஐயா! எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து போகிறோமோ அவ்வளவுக்கு நல்லது! அதிக நேரம் தங்கினால் கந்தமாறனும் அவன் தந்தையும் ஏதாவது தவறாக எண்ணிக் கொள்ளலாம்" என்றான் வந்தியத்தேவன்.

"யார் வேணுமானாலும் தவறாக எண்ணிக் கொள்ளட்டும். நம் தலையை வாங்கிவிடுவார்களா, என்ன? இந்தப் பெண்கள் நம்மைப் பற்றித் தவறாக எண்ணிக் கொள்ளாமலிருந்தால் போதும் அவர்கள் வந்ததும் சொல்லிக் கொண்டு புறப்படலாம்" என்றார் இளவரசர்.

சற்று நேரத்துக்கெல்லாம் நந்தினியும் மணிமேகலையும் புதிய ஆடைகள் அணிந்து அலங்கரித்துக் கொண்டு வந்தார்கள். நந்தினியின் கன்னத்திலும் தோளிலும் இரத்தக் காயம் தெரியாதபடி அஞ்சனம் தடவியிருந்தது.

"உங்களிடம் விடை பெற்றுக் கொண்டு போவதற்காகக் காத்திருந்தோம்" என்றார் கரிகாலர்.


"நன்றாயிருக்கிறது உச்சி வேளைக்கு மேலாகிவிட்டது எங்களுடன் இருந்து உணவருந்திவிட்டுத்தான் போக வேண்டும். இந்த நேரத்தில் உங்களைப் போக விட்டுவிட்டால், சம்புவரையர் மகள் என்னை மன்னிக்கவே மாட்டாள்" என்றாள் பழுவூர் ராணி.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நாய் வேண்டிய தண்டனை



ஒரு நாய் உடலெங்கும் குருதி வழிய, வலியால் துடித்துக் கொண்டே இராமரிடம் ஓடி வந்தது. அதன் மீது இரக்கம் கொண்டார் அவர்.

உடனே இலக்குவனை அழைத்து "இந்த நாயின் நிலைக்கு யார் காரணமோ அவனை இங்கு கொண்டு வா" என்றார்.

அண்ணனின் கட்டளையை ஏற்ற இலக்குவன் வழியில் வருவோர் போவோரை எல்லாம் விசாரித்தான். [illegible] புறுத்தியவன் ஓர் அந்தணன் என்பதை அறிந்து அவனை அழைத்துக் கொண்டு இராமரிடம் வந்தான்.

அந்தணனை இராமர் விசாரித்தார். ஆனால் அவனோ, "நாய் என் வழியில் அடிக்கடி குறுக்கிட்டுக் குரைத்துத் தொல்லை தந்து கொண்டிருந்தது. அதனால் இப்படிச் செய்தேன்" என்று ஆணவமாகப் பதில் சொன்னான்.

இதைக் கேட்ட இராமர் முழுத் தவறும் அந்தணன் மீதுதான் இருப்பதாக உணர்ந்தார்.

நாயைப் பார்த்து, "நீ இவனை எப்படித் தண்டிக்க நினைக்கின்றாய்? சொல், அப்படியே செய்கிறேன்" என்றார்.

"இவனை ஒரு கோயில் தர்மகர்த்தாவாக ஆக்கிவிடுங்கள்" என்றது நாய்.

இராமர் இதைக் கேட்டு வியப்புடன், "அது இவனுக்குத் தரும் பரிசாகுமே தவிர தண்டனையாகாதே" என்றார்.

அதற்கு அந்த நாய், "நான் போன பிறவியில் கோயில் தர்மகர்த்தாவாகத்தான் இருந்தேன். அப்படி இருப்பவர் யாராக இருந்தாலும் தெரிந்தோ தெரியாமலோ கோயில் சொத்தில் கை வைக்காமல் இருக்க முடியாது.

அப்படிக் கை வைத்தால் அடுத்த பிறவி நாய்ப் பிறவி தான். அடி உதை தான். இவனும் என்னைப் போல் அடி உதைபட வேண்டும் என்பதால்தான் அப்படிக் கேட்கிறேன்" என்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தும் மழைத்துளி அனைத்தும் முத்து!
அத்தனையும் சேர்த்துவை!
அவை நாளைய சொத்து! - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒரு மிறடு குடிநீருக்காக அரைலீற்றரை வீணாக்குவதா?

கிணற்று நீரை அள்ளிக் குடித்துத் தாகம் தீர்த்த அந்த அருமந்த காலம் கடந்து கன காலம் ஆயிற்று.

இப்போது போத்தலில் அடைத்த குடிநீர் இன்றி இச்சீவன் இயங்காது என்ற நிலைக்கு நாம் வந்தாயினோம்.

போதாக்குறைக்கு நிலத்தடி நீர் குறைகிறது என்ற கருத்தியல், போத்தல் குடிநீருக்கு நம்மவர்கள் செய்துகொடுத்த விளம்பரம்.

ஆம், இப்பிரபஞ்சத்தின் தோற்றம் அதன் படைப்பு எத்துணை விந்தையானது.

இப்பூமியின் படைப்பை கடுகளவேனும் அறிய முடியாத நிலையில் நிலத்தடி நீர் குறைகிறது - குன்றுகிறது என்றுரைத்த பேராளர்கள் அண்மையில் நம் மண்ணில் பெய்த மழை நீர் நிலத்துள் - கடலுள் சென்றது பற்றிச் சிறிதும் சிந்தியார்.

பரவாயில்லை. கிணற்று நீரை நம்பி வாழ்கின்ற நம்மை நோக்கி போத்தல் குடிநீர் வியாபாரத்தைச் செய்வதுதான் சாலப்பொருத்தம் என்பது போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்தியாளர்களுக்கு நன்கு தெரியும்.

அதனால் அவர்கள் வியூகம் அமைத்தனர். கிணற்று நீரை எடுத்தால் நிலத்தடி நீர் குறைந்து போகும். போதாக்குறைக்கு நிலத்தடி நீரில் (கிணற்று நீர்) கழிவுகளும் கலந்துள்ளது எனக் கூறி வைக்க, இப்போது எங்கள் வடமாகாணம் உள்ளிட்ட தமிழர் தாயகம் எங்கும் போத்தல் குடிநீர்.

இதில் கொடுமை என்னவென்றால், வடக்கில் போத்தல் குடிநீரை உற்பத்தி செய்யவும் முடியாதாம். காரணம் நிலத்தடி நீர் குறைந்து போகுமாம்.

எப்படி? தென்பகுதி குடிநீர் மாபியாக்களின் கெட்டித்தனம்.

இப்போது தென்பகுதியில் இருந்து இலட்சக்கணக்கான குடிநீர் போத்தல்கள் வடக்குக்கு வந்து; இங்குள்ள கோடிக்கணக்கான பணத்தை வாரிச்சுருட்டிச் செல்கின்றன.

இதில் கொடுமை என்னவென்றால், சாப்பிட்ட பின்னர் ஒரு மிறடு தண்ணீர் குடிப்பதற்காக அரைலீற்றர் போத்தல் தண்ணீரை எங்கள் திருமண மண்டபங்கள் வழங்குகின்றமையாகும். உண்மையில் திருமண மண்டபங்கள் பொதுவில் சுத்திகரித்த குடிநீரை வைத்தால் அது போதுமானது.

ஆனால் அவர்கள் அதைச் செய்யமாட்டார்கள். ஏனென்றால், போத்தல் குடிநீர் வர்த்தகர்கள் அவர்களை வாலாயம் செய்து வைத்துள்ளனர்.

ஆம், அது திருமணம் செய்கின்றவர்களின் காசல்லவா! ஒரு மிறடு குடிநீருக்காக அரை லீற்றர் போத்தல் தண்ணீர்.

இங்கு குடிநீர் வீணாகுவது தொடர்பில் நிலத்தடி நீர் பற்றிச் சிந்திக்கும் சீலர்கள் வாய்திறப்பதேயில்லை.

## பூநகரி - பரந்தன்
# பிரதான வீதியில் காட்டு யானைகள்

(பூநகரி)

பரந்தன் - பூநகரி பிரதான வீதிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை காட்டு யானைகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே இரவுவேளைகளிலும் அதிகாலையிலும் குறித்த வீதியால் பயணிப்போர் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கோரப்பட்டுள்ளது.

தற்போது நெல் அறுவடைக்காலம் என்பதால்வயல்களினை நோக்கியும் குறித்த வீதியில் இரவுவேளைகளில் உலரவிடப்படும் நெல்லை உண்பதற்காகவும் யானைகள் வீதிக்குள் பிரவேசிப்பதாகவும் அவ்வாறே நான்கு யானைகள் அடங்கிய யானைக் கூட்டத்தின் நடமாட்டம் நேற்று அதிகாலை காணப்பட்டதாகவும் அவ்வீதியால் பயணித்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.

எனவே குறித்த வீதியின் வயல் நிறைந்த பகுதிகளூடாக பயணிக்கையில் சாரதிகள் விழிப்புடன் செயற்படுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)

# பூநகரிப் பகுதியில் ஓட்டோ விபத்து

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் நேற்று அதிகாலை திடீரென வீதிக்குள் பிரவேசித்த காட்டுயானைக் கூட்டத்தால் நிலைதடுமாறிய முச்சக்கரவண்டியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தானது பரந்தன் - பூநகரி பிரதான வீதியில் அதிகாலை 04.45 க்கும் 05.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முச்சக்கரவண்டியானது பூநகரி நோக்கிப்பயணித்துக்கொண்டிருந்த வேளை நான்கு யானைகள் அடங்கிய யானைக் கூட்டமொன்று திடீரென வீதிக்குள் பிரவேசித்துள்ளது.

இதன்போது முச்சக்கரவண்டியின் சாரதி யானையுடனான விபத்தைத் தடுக்க முற்பட்டவேளை நிலைதடுமாறிய முச்சக்கரவண்டி அருகிலிருந்த வயலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்பதுடன் யானைக் கூட்டம் அவ் இடத்தை விட்டு விலகிச்சென்றமையால் பாரிய உயிர்ச்சேதமும் தவிர்க்கப்பட்டது.

விபத்துக்குள்ளான வாகனம் அவ்வீதியால் பயணித்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் கடும் பிரயத்தனத்திற்கு மத்தியில் மீட்கப்பட்டது. (ம-7)

# விக்ரோறியாக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று (13) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி க.சுலபாமதி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் வலிகாமம் கல்வி வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான விக்ரோறியன் கா.சந்திரபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அதேவேளை சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரும் கல்லூரியின் பழைய மாணவனுமான விக்ரோறியன் கு.பாலமுகுந்தன் அவர்களும் கௌரவ விருந்தினராக கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியர் செ.செல்வகுமார் அவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-7)

# ஆண்டுப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வங்கி ஓய்வுநிலை வங்கியாளர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டமானது நாளை (14) சனிக்கிழமை காலை 09.30 மணியளவில்மனோகரா சினிமா திரையரங்குக்கருகில் அமைந்துள்ள வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

# கொக்குவில் மேற்கில் மஹா சிவராத்திரி விழா

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வாராஹி சன சமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடாத்தும் மஹா சிவராத்திரி விழாவானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணி முதல் கொக்குவில் மேற்கு ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

வாராஹி சன சமூக நிலையத்தலைவர் நடேசு ஜெயராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கான ஆசியுரையை வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு [illegible]

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மெய்யியற் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான தி.திலீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இவ் மஹா சிவராத்திரி விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.ரமணராஜ் மற்றும் இளம் சைவப்புலவர் விஸ்ணுயன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றவுள்ளதோடு பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளும் சிறப்புற இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# வவுனியாவில் விபத்து

(கனகராயன்குளம்)

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற குறித்த விபத்துத் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஏ9 வீதியூடாக பயணித்த குறித்த காரானது கனகராயன்குளம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதுடன் வாகனத்தில் பயணித்த ஆசிரியர் ஒருவர் உட்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் நோயாளர் காவுவண்டி மூலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# வெளிநாட்டு ஆசை காட்டி பண மோசடி
## இளம்குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

வெளிநாட்டுக்குச் செல்லும் நோக்குடன் நிறுவனமொன்றிடம் பணம் செலுத்திய நிலையில் ஏமாற்றப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

கீரிமலைப் பகுதியிலுள்ள வீடொன்றிலேயே நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

21

என்.சொக்கன்

நாஸ்திகர்களின் ஆட்சியின்கீழ் குடிமக்களாக இருப்பதில் அவர்களுக்குச் சில மன வருத்தங்கள் இருந்தன.

இதைப் புரிந்துகொண்ட சோவியத் யூனியன், ஆப்கானிஸ்தானுக்குப் பலவிதமான அரசியல், பொருளாதார உதவிகளை அளிக்கத் தொடங்கினார்கள். ஆப்கானில் சோவியத் ஆதரவுடன் ஓர் இடதுசாரி அரசு அமைந்தது.

'PDPA' என்ற அந்த ஆப்கான் குடியரசுக் கட்சி (People's Democratic Party Of Afghanistan) யில் ஆரம்பத்தில் எல்லாம் ஒழுங்காகத்தான் இருந்தது. 1967இல் உள்கட்சிப் பூசல்கள், பகை, ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகள் என்று சகல குழப்பங்களும் தொடங்கின.

இதனால், கட்சியில் எல்லோரும் தங்களை வருங்காலப் பிரதமர்களாகக் கருதிக்கொண்டார்கள். "அவன் ஏன் பதவியில் இருக்கிறான்? அவனைக் கவிழ்த்துவிட்டு நான் ஏன் பதவிக்கு வரக்கூடாது?" என்பதில் தொடங்கி நீ இந்த ஊழல் செய்தாய், நான் அந்த ஊழல் செய்தேன் என்கிற ரேஞ்சுக்கு அடித்துக்கொள்ளத் தொடங்கினார்கள். இதனால், ஆப்கான் அரசியலில் சாக்கடை நாற்றமடிக்க ஆரம்பித்தது.

1973ஆம் ஆண்டு, தாவூத் என்பவர் அப்போதைய அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டுப் பதவிக்கு வந்தார். ஐந்து வருடம் கழித்து இன்னொரு இராணுவப் புரட்சி, அடுத்த சில மாதங்களில் மற்றுமொரு குட்டிப்புரட்சி என்று நிலைமை கை மீறத் தொடங்கியிருந்தது.

சோவியத் யூனியனைப் பொறுத்தவரை, ஆப்கானின் உள்விவகாரங்களில் நேரடியாகத் தலையிட அவர்கள் விரும்பவில்லை. ஆனால், அங்கே அமையும் அரசு தங்களுக்கு ஆதரவானதாக இருக்க வேண்டும் என்று மட்டும் விரும்பினார்கள்.

ஆனால், அமாவாசைக்கு ஓர் ஆட்சிக் கவிழ்ப்பு. பௌர்ணமியில் இன்னொரு புதிய அரசாங்கம் என்று கலாட்டா தேசமாகிக் கொண்டிருக்கிறது ஆப்கான். இந்த நிலைமையில், ஆட்சிக்கு வருகிறவர்கள் எல்லோரும் சோவியத் யூனியன் ஆதரவாளர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

அங்கேதான் பிரச்சினை தொடங்கியது. அஃபிசுல்லா அமீன் என்ற இராணுவப் புரட்சிக்காரர், சோவியத்துடன் இணைந்து செயற்படுவதில்லை என்று முடிவெடுத்தார்.

இதனால் கடுப்பான சோவியத் யூனியன், தமது படையினரை ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பி வைத்தது. இதன் நோக்கம், ஆப்கானை ஆக்கிரமித்து சோவியத் யூனியனில் சேர்த்துக்கொள்வது அல்ல. அங்கே ஒரு சிவப்பு அரசாங்கம் அமைப்பது மட்டுமே.



அதுவரை, ஆப்கானிஸ்தான் என்று ஒரு தேசம் இருப்பதே அமெரிக்காவுக்குத் தெரிந்திருக்குமோ, இல்லையோ.

சோவியத் யூனியன் இப்படி ஓர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்று தெரிந்ததும், மள மளவென்று தங்களுடைய தரப்புக் கைங்கர்யங்களுக்குத் தயாராகிவிட்டார்கள்.

இதுவே உலகப்போர் சமயமாக இருந்தால், சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பை விலக்க நாங்கள் ஆப்கானுக்கு உதவுகிறோமாக்கும் என்று சொல்லிக்கொண்டு அமெரிக்கா தனது இராணுவத்துடன் கிளம்பியிருக்கும். ஆனால் இப்போது அமைதிக்காலம். ஆகவே, கொஞ்சம் மறைமுகமாகத்தான் செயற்பட வேண்டியிருக்கும்.

வெளிநாடு, மறைமுகம். போதாதா? உடனடியாக சிஐஏவைக் கூப்பிட்டு விட்டார் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் (Jimmy Carter).

ஆப்கானிஸ்தானில் என்ன நடக்கிறது? அதில் நாம் செய்யக்கூடியது என்ன? அதைவிட முக்கியமாக, இதனால் நமக்கு உடனடி, நீண்ட காலப் பலன்கள் என்னென்ன உண்டு?

சிஐஏ உருவாக்கப்பட்டபோது, அதன் கடமைகள் என்று ஒரு லிஸ்ட் கொடுத்திருந்தார்கள். இதுதவிர, காலப்போக்கில் சிஐஏவே தனக்கென்று சில சட்டதிட்டங்களை உருவாக்கிக்கொண்டிருந்தது. இந்த எவற்றிலும், அடுத்த நாடுகளின்மீது படையெடுக்கும் உரிமை இல்லை.

ஆனால் அதேசமயம், திரைமறைவில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இராணுவ விமானங்கள். டாங்கிகளில் பறக்கவிட்டுக் கொண்டு அமெரிக்கக் கொடியைப் ஆப்கானுக்குக் கிளம்பமுடியாதே தவிர, வேறுவிதத்தில் சோவியத் யூனியனை எதிர்க்கலாம்.

பிரம்மாண்டமான சோவியத் யூனியனுடன் ஒப்பிடுகையில், ஆப்கானிஸ்தான் சிறிய தேசம். ஆனால் அதற்காக, அவர்கள் படை திரட்டிக் கொண்டு வந்ததும், "வாங்க மச்சான் வாங்க" என்று யாரும் பாட்டுப்பாடி வரவேற்கப் போவதில்லை. நிச்சயமாக சோவியத் ஆக்கிரமிப்புக்கு உள்ளூரில் எதிர்ப்பு இருக்கும் என்று கணித்தது சிஐஏ.

வழக்கம்போல், அந்த எதிர்ப்பாளர்களுக்கு தாராளமாக உதவத் தீர்மானித்தார்கள். அவர்கள் கையை வைத்து, சோவியத் யூனியனின் கண்ணைக் குத்துவதுதான் அடிப்படை நோக்கம்.

பொருளாதார ரீதியில் பின்தங்கிய தேசமான ஆப்கானில், புரட்சி அமைப்புகளும் வறுமையில்தான் இருந்தன. படை பலம் ஓரளவு இருந்தாலும், ஆயுதங்கள் விடயத்தில் சில நூற்றாண்டுகள் பின்னே இருந்தார்கள். அடி, உதை தெரியும். ஆனால், முறைப்படி தந்திரமாகப் போர் செய்கிற புத்திசாலித்தனம் தெரியாது.

இதையெல்லாம் சிஐஏவுக்கு முன்பே சிலர் கவனித்திருந்தார்கள்- பாகிஸ்தான் உளவுத்துறையான ஐஎஸ்ஐ (ISI - Inter Services Intelligence).

பாகிஸ்தானுக்கு ஏன் ஆப்கானிஸ்தான்மீது பிரியம் என்பது தனிக்கதை. அது இங்கே வேண்டாம். இப்போதைக்கு, சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த ஆப்கான் முஜாஹிதீன்களுக்கு ஐஎஸ்ஐ உதவத் தீர்மானித்திருந்தது என்பதோடு நிறுத்திக் கொள்வோம்.

உதவி என்றால், முஜாஹிதீன்களுக்கு வயிறு நிறைய சாப்பாடு போடுவதில் தொடங்கி, ஆயுதப் பயிற்சி, யுத்தப்பயிற்சி என்று சகலத்துக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். இதற்காக, பாகிஸ்தான்-ஆப்கான் எல்லைகள் திறந்துவிடப்பட்டிருந்தன.

இதைக் கேள்விப்பட்ட சிஐஏ உற்சாகமாகி விட்டது. குட்டையைக் குழப்புவதற்கு இன்னொரு சிநேகிதன் என்று ஐஎஸ்ஐ உடன் கை கோர்த்துக் கொண்டார்கள்.

ஆப்கான் போராளிகளுக்கு வழங்குவதற்காக சீனா, எகிப்து உள்ளிட்ட சில நாடுகளில் இருந்து சுமார் 15 மில்லியன் டொலர்கள் மதிப்பிற்கு ஆயுதங்களை வாங்கியது சிஐஏ. இந்த ஆயுதங்கள் அமெரிக்க விமானங்களில் ஏற்றப்பட்டு, பாகிஸ்தான் சென்று சேர்ந்தன.

இந்த ஆயுதங்களை, ஆப்கானில் செயற்பட்டுவரும் பல போராளிக் குழுக்களுக்குப் பிரித்து வழங்கும் பொறுப்பு பாகிஸ்தானுடையது. இதிலும் சிஐஏ ஒரு சின்ன சூட்சுமம் வைத்திருந்தது.

ஆப்கான் போராளிக் குழுக்களில் யாரெல்லாம் அதிதீவிரவாதிகள், பழிபாவங்களுக்கு அஞ்சாதவர்கள் என்று கணக்குப்போட்டு, அவர்களுக்குமட்டும் அதிக அளவு ஆயுதங்களைக் கொடுத்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலங்கன்...

அறியப்படுகிறது.

அது, தங்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டவை அல்ல என ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனமானது தனிப்பட்ட விபரங்கள் மற்றும் பணம் என்பவற்றை வாட்ஸ் அப் அல்லது வேறு சமூக ஊடகங்களினூடாகக் கேட்பதில்லை.

எனவே சந்தேகத்திற்கிடமான இணைப்புகளை கிளிக் செய்ய வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான போலி இணைப்புகளுக்கு உங்கள் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, ஓ.ரி.பி இலக்கம் மற்றும் வங்கி அட்டை விபரங்களைப் பகிர வேண்டாம்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ தொலைபேசி, வலைத்தளங்கள், செயலிகள் மற்றும் சரிபார்க்கப்பட்ட சமூக ஊடகப் பக்கங்கள் மூலம் மட்டுமே நிறுவனம் மற்றும் அதன் சலுகைகள் குறித்து அறிய முடியும் எனத் தெரிவித்துள்ளது. (ம-7)

## உயிர்த்த...

மாவத்தையில் அமைந்துள்ள இலக்கம் C 76 எனும் முன்னாள் அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினுள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் இதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதை விரைவுபடுத்துமாறு விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் நீதிமன்றங்களை நிறுவும் பணிகளை நேற்று நேரில் கண்காணித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேபோல் முன்னாள் அமைச்சர்களினால் பயன்படுத்தப்பட்டு தற்போது நீதிமன்றங்களை நிறுவுவதற்காகப் பொறுப்பேற்கப்பட்ட ஏனைய வாசஸ்தலங்களிலும் நீதிமன்றங்களை அமைப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விரைவாக வழங்குமாறு அவர் குறிப்பிட்டார். (ம-7)

## வாகனத்தை...

னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது மகனுக்கும் வெள்ளை மோட்டார் சைக்கிளில் நின்ற பொலிஸாருக்குமிடையேதான் பிரச்சினை ஏற்பட்டது. அவர்களுடன் பிரச்சினை பட்டுவிட்டு சென்றவேளை ஜீப்பில் வந்த பொலிஸாராலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஜீப்பில் வந்த பொலிஸாருக்கும் எனது மகனுக்குமிடையே எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. வாகனத்தை நிறுத்திய பின்னரே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அந்தப் பொலிஸார் எனது மகனிடம் கொத்து, சிகரெட் ஆகியன வழமையாக வாங்கிச் சாப்பிடுகின்றவர்களாம்.

இன்று (நேற்று) எமது வீட்டுக்கு வந்த பொலிஸார் போராட்டம் செய்ய வேண்டாம் என்று மறித்தனர்.

எனது மகன் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டது 1.30க்கு என்று சொல்லப்படுகிறது. ஆனால் 5.30 மணிக்கே அவரது சடலம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஒரு இடத்தில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது, ஆனால் வேறொரு இடத்திற்கு சடலம் இழுத்துச் செல்லப்பட்டு போடப்பட்டது.

எனது மகனோடு சென்ற இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களைச் சித்திரவதை செய்துள்ளார்கள். அவர்களின் உடற்பகுதியில் அடிகாயங்கள் உள்ளன. கஞ்சா வழக்கு மற்றும் வேறு வழக்குகள் அவர்கள் மீது பதிவு செய்யப்போவதாக மிரட்டினார்களாம்.

முதல் சூட்டிலேயே அவர் மயங்கியதாகக் கூட இருந்தவர்கள் கூறுகின்றார்கள். அதன்பின்னரே ஏனைய துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றுள்ளன. இது திட்டமிட்ட ஒரு கொலை. எனவே இதற்கு ஒரு சரியான முடிவெடுத்து எனது பிள்ளையை கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றார். (ம-7,104)

## 17 வயதுச்...

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாரைக் கைது செய்யுமாறு, துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சிறுவனின் சடலத்துடன் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அல்லைப்பிட்டியில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட 17 வயதுச் சிறுவனின் இறுதிக் கிரியைகள் நேற்று வட்டுக்கோட்டை - சித்தங்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

அதன்பின்னர் பதாகைகளைத் தாங்கியவாறு சடலத்துடன் வந்த உறவுகள் வீதியில் இருந்து "பொலிஸாரைக் கைது செய், எமது பிள்ளைக்கு நீதி வேண்டும், பொலிஸாரின் அராஜகம் தொடர்கிறது" எனக்கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து சிறுவனின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## அநுர...

யைக் கவிழ்க்கும் முயற்சி நகைப்புக்குரியது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிப் பேசுவதற்கு இன்னும் நீண்ட காலம் உள்ளது. தற்போதைய நிலையில் அரசு பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் பணிகளிலேயே முழுமையாக ஈடுபட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் தேர்தல் கனவு காண்பதை விடுத்து, நாட்டின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்க வேண்டும்.

ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் இல்லை என்று விஜயதாஸ ராஜபக்ஷ கூறுவது நகைப்புக்குரியது. மக்களால் பலமான ஆணையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசை யாராலும் அவ்வளவு எளிதாக அசைக்க முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தற்போது பிளவுபட்டு, பலவீனமடைந்துள்ளது. அந்தப் பலவீனத்தை மறைப்பதற்காகவே "கட்சியைப் பலப்படுத்துகின்றோம்", "தேர்தலுக்குத் தயார்" போன்ற வீர வசனங்களை விஜயதாஸ ராஜபக்ஷ பேசி வருகின்றார் என்றார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


### மஹஜன சம்பத
திகதி 2026.02.12
சீட்டிழுப்பு இலக்கம் 6103
U 9 2 5 0 5 9

### அத சம்பத
U 5 0 5 9
சீட்டிழுப்பு இலக்கம் 0678

### சுப தவசக்
திகதி 2026.02.12
சீட்டிழுப்பு இலக்கம் 216
கடகம் 11 43 46
7735

### தன நிதானய
திகதி - 2026.02.12
சீட்டிழுப்பு இலக்கம் - 2133
O 50 51 52 58 O

### மெகா பவர்
திகதி 12/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2451
V 21 18 22 69 72

### ஜய
திகதி 2026.02.12
சீட்டிழுப்பு இலக்கம் 0371
G 4 5 0 3

### கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4345
சீட்டிழுப்பு திகதி 12.02.2026
H 07 24 33 53
H

### ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.12
சீட்டிழுப்பு இலக்கம் 1412
கன்னி 02 44 58 61 கன்னி

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா
12.02.2026 வெற்றி வாரம் 0811
D 9 3 8 4 1 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,135,181.20

### சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 3077
சீட்டிழுப்பு திகதி 2026.02.12 தினம் வியாழக்கிழமை
28 42 47 61 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 97,812,151.20

### சனிதா
திகதி 12.02.2026 வெற்றி வாரம் 5238
03 28 47 76 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,308,216.80

### சசிரி
வெற்றி வாரம் 907
சீட்டிழுப்பு திகதி 12.02.2026
வியாழக்கிழமை
26 33 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,036,280.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4789
சீட்டிழுப்பு திகதி 12.02.2026 தினம் வியாழக்கிழமை
05 06 07 54 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,697,985.60

### லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 09 03 14 33 66
2253
12.02.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.628,223,041.20

### அத கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2903
சீட்டிழுப்பு திகதி: 2026.02.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.88,922,675.20
21 33 72 73 P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள்




மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு

076 315 6470

(C-4988)

ஸ்ரீமுருகன் No,303, K.K.S Road, Jaffna.



## மணப்பெண் தேவை

01.புலோலி, இந்து, 1993, புனர்பூசம், Bachelor of computer science, Sweden Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (36387)

02.யாழ்ப்பாணம், இந்து. 1987, அவிட்டம், Electronic computer science, Sweden Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (25033)

03.சுன்னாகம் - அச்சுவேலி, இந்து, 1992, பரணி, Electronic Engineering, Switzerland Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(58671)

04.உடுப்பிட்டி, Roman Catholic, 1986, Diploma, Switzerland Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(27407)

05.யாழ்ப்பாணம், Roman Catholic, 1983, மகம், Financial analyst, Switzerland Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(21260)

06.உரும்பிராய் - அச்சுவேலி, இந்து, 1991, பூரம், Phd, UK educated, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(57168)

07.இணுவில் - கோண்டாவில், இந்து. 1986, ரோகிணி, Graduate, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(31506)

08.கொக்குவில், இந்து, 1990, விசாகம், Bio medical Engineer, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30569)

09.யாழ்ப்பாணம், இந்து, 1985, விசாகம், Male nurse, Norway Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54185)

10.புங்குடுதீவு, இந்து, 1989, அத்தம், IT Engineer, Own Business, Germany Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(44263)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

(6815)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 074 387 3686


# யாழ்ப்பாணத்தில் சமுர்த்தி வங்கிகளில்

## அடகு கடன் சேவை

# ATM வசதி ஏற்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முதற்கட்டமாக யாழ்ப்பாணத்திலுள்ள சமுர்த்தி வங்கிகளில் ஒன்றில் தானியங்கி இயந்திரம் (ATM) வசதி மற்றும் அடகு கடன் சேவை ஒன்றினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று நடவடிக்கை எடுப்பதாக சமுர்த்தி குறுநிதி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி திணைக்களத்தினால் சமுர்த்தி வங்கி மற்றும் வங்கி சங்கங்களுக்கான சமுர்த்திக் கடன் வழங்கல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் பொ.ஸ்ரீவர்ணன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் சமுர்த்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பணிப்பாளர் லால் கருணாதிலக ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நேற்றுக் காலை 09.30 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவ் விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் தொடக்கவுரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மேலதிக சமுர்த்தி பணிப்பாளர் நாயகமுமான மருதலிங்கம் பிரதீபன் அவர்கள், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 33 சமுர்த்தி வங்கிகள் காணப்படுவதாகவும் அதன் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகளை வினைத்திறனாக்கி ஏனைய வங்கிகளுக்கு நிகரான முறையில் உயர்த்த வேண்டும் எனவும் தெரிவித்ததுடன், கொழும்பு மாவட்டத் தின் சமுர்த்தி வங்கி ஒன்றில் நகை அடகு சேவை மற்றும் தானியங்கி இயந்திரம் (ATM) நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான திட்டங்களை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒரு சமுர்த்தி வங்கியில் நடைமுறைப்படுத்தினால் அதற்கு அரசாங்க அதிபர் என்ற வகையில் அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கத் தயாராக உள்ளதாகவும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகம் ஆகியவற்றில் உள்ள தலா ஒரு வங்கிகளில் இச் செயற்பாடுகளை ஆரம்பிக்க பூரண ஒத்துழைப்பு நல்குவதாகவும் தெரிவித்தார்.

இப்பயிற்சிப் பட்டறை நிகழ்வில் அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க,

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள சமுர்த்தி வங்கிகளில் தலா ஒன்றில் தானியங்கி இயந்திர வசதி (ATM) மற்றும் நகை அடகு சேவை முறைமை ஒன்றை நிறுவுவதற்கு உரிய நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாக சமுர்த்தித் திணைக்களத்தின் குறுநிதி பணிப்பாளர் லால் கருணாதிலக தெரிவித்தார். (ம-7)

### போதைப்பொருட்களுடன்

## கொழும்பில் பெண் உட்பட 13 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு மொரட்டுவை அங்குலானப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பெண் உட்பட 13 பேர் போதைப்பொருட்களுடன் நேற்று (12) கைது செய்யப்பட்டுள்ளதாக அங்குலானப் பொலிஸார் தெரிவித்தனர்.

அங்குலானப் பொலிஸார் மற்றும் கடற்படை இணைந்து இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 13,820 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 180 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள், போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.


இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அங்குலானப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

மண்ணில் 24 . 08 . 1958



விண்ணில் 14 . 01 . 2026

கடந்த 14.01.2026 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சிதம்பரபிள்ளை இராஜமோகன் (டிங்கர் மோகன் )

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த [11.02.2026] புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் [13.02.2026] இன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் திவ்யமஹால் மண்டபத்தில் [நாச்சிமார் கோவிலடி] நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(6824)

காளி கோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்



## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண், பெண் வகுப்பு மேற்பார்வையாளர், கிளார்க் தேவை.

தொடர்பு கொள்ளும் நேரம் :
காலை 7.00 am - மாலை 5.00 pm

075 896 0575

(C-4987)



## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் முல்லைத்தீவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

076 889 1308
077 606 1333

(2041)



இலங்கையில் இருந்து கனடாவிற்கு
கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg
DELIVERY ▸ 2-3 Months

எமது நேரடி கிளைகள்

V2 TRAVELS 076 822 6244, 076 455 0672

(C-4989)



## நாயைக் காணவில்லை

இல.371, கோயில் வீதி நல்லூரில் வளர்க்கப்பட்டு வந்த ஒரு வயதான Brown நிற ஆண் நாய் கடந்த திங்கள் மாலை 5 மணி முதல் காணாமல் போயுள்ளது. இதைக் கண்டவர்கள் மீட்டுத்தருவார்களாயின் மிக நன்றியுடையவர்களாவோம்.

சன்மானமாக ரூ.50,000.00 வழங்கப்படும்.



077 840 3027, 021 221 9356

(6823)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org